உ

ஸ்ரீ சிவாசலபதி துணை

# அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்,

சிவன்மலை.

காங்கயம் வட்டம், திருப்பூர் மாவட்டம்.



## கந்த சஷ்டி சூரசம்ஹார திருவிழா

# அழைப்பிதழ்

துவக்கம் நாள் : 31. 10. 2016 நிறைவு நாள் : 7. 11. 2016

ஸ்ரீ சிவாசலபதி துணை

சிவமலை என்றிட சிதையுந் தீவினை
சிவமலை என்றிட திருவந்தெய்திடும்
சிவமலை என்றிட சேரும் புண்ணியம்
சிவமலை என்றிட சித்தியாகுமால்.

- சிவன்மலை புராணம்.

## சிவன்மலை, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்,

# கந்த சஷ்டி சூரசம்ஹார திருவிழா

# அழைப்பிதழ்

மெய்யன்புடையீர்,

வரலாற்றுப்பெருமையும், வாழ்வியல் வளமும், வற்றாச்சீருடைய கொங்குவள நாட்டில் பாங்குடன் பொழிந்தோங்கிய புகழெலாம் சிறந்த காங்கய நாட்டில் அன்னச் சத்திரமும், செந்தமிழ் வேள்வியும் உடைய சிவன்மலையில் இருகரங்கள் குவித்து கனிவொடு நெக்குருகி குகாவென வருவோர்க்கு வேண்டியதை வேண்டியபடி அருளும் ஆரணமும் ஆகமமுந் துதித்தே அன்பர் நிற்கும் வாசலிது, காரணமா மூவர்கள் மெய்த்தமிழை கனிந்து சொல்லும் வாசலிது, நக்கீரர் தமிழுரைத்தே மிகநலம் பெருகும் வாசலிது, பொற்புடனே அருணகிரி திருப்புகழ்படிக்கும் வாசலிது என்று போற்றப்படும் இச்சிவமலை திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமானுக்கு "ஈனமங்கே செய்த தாருகனை, ஆயிரம் இலக்கமுறு சிங்கமுகனை, எண்ணரிய திறல் பெற்ற சூரனை, மறக்கருணை ஈந்து பணி கொண்டாய்" எனப்போற்றி சேந்தனுக்கு, கந்தனுக்கு, செங்கோட்டு வெற்பனுக்கு, செஞ்சுடர் நெடுவேல் வேந்தனுக்கு, செந்தமிழ் நூல் விரித்தோனுக்கு, விளங்குவள்ளி காந்தனுக்கு, கந்தக்கடம்பனுக்கு, கார்மயில் வாகனனுக்கு, சேவல்கொடியோனுக்கு

கந்தசஷ்டி சூரசம்ஹாரத் திருவிழா நிகழும் மங்களகரமான ஸ்ரீ துன்முகி வருடம் ஐப்பசி மாதம் 15 ஆம் நாள் ( 31. 10. 2016 ) திங்கட்கிழமை தொடங்கி ஐப்பசி மாதம் 22 ஆம் நாள் (7. 11. 2016) திங்கட்கிழமை முடிய கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரலின்படி சிறப்பாக நடைபெற உள்ளது.

அதுசமயம் மெய்யன்பர்கள் அனைவரும் வருகைதந்து ஆண்டவரை தரிசித்து இறையருள் பெற அன்புடன் அழைக்கின்றோம்.

| துவக்க நாள் | | நிறைவு நாள் |
|---|---|---|
| 31. 10. 2016 | | 7. 11. 2016 |

## நிகழ்ச்சி நிரல்

| தமிழ் வருடம் மாதம் நாள் | ஆங்கில தேதி, கிழமை | கட்டளை உபயதாரர்கள் |
|---|---|---|
| ஐப்பசி 15<br>1-ஆம் திருநாள் | 31. 10. 2016<br>திங்கள் | பழையகோட்டை சின்ன அரண்மனை<br>ஆனூர் சம்பந்த சக்கரை<br>திரு. சி. நவீன் மன்றாடியார் அவர்கள்<br>காலை 10.30 மணிக்கு<br>அபிஷேக ஆராதனை, திருவுலாக்காட்சி நடைபெறும். |
| | மதியம் | பிற்பகல் 2.00 மணிக்கு சுவாமி அடிவாரம்<br>அருள்மிகு நஞ்சுண்டேஸ்வரர் திருக்கோயிலுக்கு<br>எழுந்தருளல். |
| | மாலை | திரு. சி. மோகன் தேவசேனாபதி அவர்கள்<br>திருமதி. மாங்களகௌரி அவர்கள், வெட்டுக்காட்டுவலசு.<br>மாலை 4.00 மணிக்கு<br>அபிஷேக ஆராதனை, திருவுலாக்காட்சி நடைபெறும். |
| ஐப்பசி 16<br>2-ஆம் திருநாள் | 1. 11. 2016<br>செவ்வாய் | திரு. கே. நடராஜ் ஐ.பி.எஸ்., ஏ.டி.ஜி.பி., (Retd) அவர்கள்<br>திருமதி. என். சாந்தினிதேவி நடராஜ் அவர்கள்,<br>சென்னை.<br>காலை 10.30 மணிக்கு<br>அபிஷேக ஆராதனை, திருவுலாக்காட்சி நடைபெறும். |
| | மாலை | திரு. கே.எஸ்.என். வேணுகோபாலு, அவர்கள்,<br>முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், பழனி.<br>த/பெ. எ. சேனாபதிக்கவுண்டர் அவர்கள்<br>முன்னாள் எம்.பி., தாராபுரம்.<br>மாலை 4.00 மணிக்கு<br>அபிஷேக ஆராதனை, திருவுலாக்காட்சி நடைபெறும். |
| ஐப்பசி 17<br>3-ஆம் திருநாள் | 2. 11. 2016<br>புதன் | திரு. கே. ஜெயராமசாமி அவர்கள்<br>திருமதி. பாரதி ஜெயராமசாமி அவர்கள், ஜெயராமபுரம்.<br>காலை 10.30 மணிக்கு<br>அபிஷேக ஆராதனை, திருவுலாக்காட்சி நடைபெறும். |
| | மாலை | திரு. பி. விஜய் நடராஜ் அவர்கள், மேட்டுப்பாளையம்.<br>மாலை 4.00 மணிக்கு<br>அபிஷேக ஆராதனை, திருவுலாக்காட்சி நடைபெறும். |
| ஐப்பசி 18<br>4-ஆம் திருநாள் | 3. 11. 2016<br>வியாழன் | திரு. பி. வேலுச்சாமிக்கவுண்டர் அவர்கள்,<br>பகவதிபாளையம், காலை 10.30 மணிக்கு<br>அபிஷேக ஆராதனை, திருவுலாக்காட்சி நடைபெறும். |
| | மாலை | திரு. டாக்டர். பி. செல்வக்குமார் அவர்கள், குண்டடம்.<br>மாலை 4.00 மணிக்கு<br>அபிஷேக ஆராதனை, திருவுலாக்காட்சி நடைபெறும். |

| | | |
|---|---|---|
| ஐப்பசி 19<br>5-ஆம் திருநாள் | 4. 11. 2016<br>வெள்ளி | திருமதி. மாலதி இளங்கோ அவர்கள்.<br>கவின் மருத்துவமனை, ஈரோடு.<br>காலை 10.30 மணிக்கு<br>அபிஷேக ஆராதனை, திருவுலாக்காட்சி நடைபெறும். |
| | மதியம் | திரு. யு.ஆர். முருகசாமி - எம். இந்திராணி அவர்கள்<br>கீதாலயா எக்ஸ்போர்ட், திருப்பூர். மாலை 4.00 மணிக்கு<br>அபிஷேக ஆராதனை, திருவுலாக்காட்சி நடைபெறும். |
| ஐப்பசி 20<br>6-ஆம் திருநாள் | 5. 11. 2016<br>சனி | திரு. கே. உதயகுமாரசாமி அவர்கள்<br>சிங்காநல்லூர், பொள்ளாச்சி.<br>காலை 6.00 மணிக்கு அபிஷேக ஆராதனை<br>மாலை 5.00 மணிக்கு சூரசம்ஹாரம் நடைபெறும். |
| ஐப்பசி 21<br>7-ஆம் திருநாள் | 6. 11. 2016<br>ஞாயிறு | திரு. எஸ்.பி. சண்முகவடிவேல் செட்டியார் சன்ஸ் அவர்கள்<br>காங்கயம். காலை 10.30 மணிக்கு<br>அபிஷேக ஆராதனை, திருவுலாக்காட்சி நடைபெறும். |
| | மாலை | பழையகோட்டை பட்டக்காரர்<br>திரு. உத்தம காமிண்ட நல்லதம்பி சர்க்கரை<br>ராஜ்குமார் மன்றாடியார் எம்.காம்.,<br>அவர்களால் மாலை 6.00 மணிக்கு<br>முருகப்பெருமான் தெய்வானை அம்மன்<br>திருக்கல்யாண உற்சவம் நடைபெறும். |
| ஐப்பசி 22<br>8-ஆம் திருநாள் | 7. 11. 2016<br>திங்கள் | மஞ்சள் நீராட்டு உற்சவம்,<br>சுவாமி திருமலைக்கு எழுந்தருளல்,<br>பாலிகை நீர்த்துறை சேர்த்தல். |

மெய்யன்பர்கள் அனைவரும் வருகைதந்து ஆண்டவரை தரிசித்து விழாவில் கலந்து இறையருள் பெற்றுச் செல்ல அன்புடன் அழைக்கின்றோம்.

கே. பசவராஜன் பி.எஸ்.சி.,
செயல் அலுவலர்.

எஸ்.வி. ஹர்சினி, பி.எஸ்.சி., பி.எல்.,
தக்கார்/உதவி ஆணையர்.

website : www.sivanmalaimurugan.tnhrce.in
e.mail : sivanmalaitemple@ tnhrce.org
Phone : office : 220680, Temple: 220630

**கந்தன் பாதம் கனவிலும் காக்கும் !**